அசல் வழக்கு எண்.271/2023

வா.சா.1 - திருமதி. மின்னல்கொடி

நாள். 17.06.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

அல்லிக்கொடி என்பவரிடமிருந்து நான் ஈடுகடன் வாங்கிய சொத்து அவருக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் சேர்ந்து பாத்தியப்பட்ட சொத்து ஆகும். அல்லிக்கொடி 1 ரூபாய் வட்டி என்று சொல்லி பணம் வாங்கினார். ஆனால் அசலும், வட்டியும் செலுத்தவில்லை. அல்லிக்கொடி உயிருடன் இருக்கும் வரை எனக்கு மாதம் ரூ.40,000/- வட்டி கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. அல்லிக்கொடி இறந்தபின்பு அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் ஜுன் 2023 ம் வருடம் வரை எனக்கு வட்டி செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அசல் தொகையில் ரூ.10,00,000/- திரும்ப செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. பழனிச்சாமி என்பவர் முன்னிலையில் ரூ.10,00,000/- பிரதிவாதிகள் எனக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகள் மீதமுள்ள அசல் தொகை ரூ.10,00,000/-மும் மற்றும் ஜுன் 2023 வருடத்திற்கு பிறகு வட்டி மட்டுமே செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/- மின்னல்கொடி

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.06.17 06:42:37 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.